சிஏ/6/4/2/7/2024 2024.07.

வணக்கத்திற்குரிய மதத் தலைவர்கள்
அமைச்சின் செயலாளர்கள்
மாகாண தலைமைச் செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்
பிரதேச செயலாளார்கள்
கூட்டுத்தாபன / சபைத் தலைவர்கள்
அதிபர்கள்

**மாற்றுத் திறனாளிகளிற்கான இலக்கிய மற்றும் கலை ஆக்கத்திறன் போட்டி - 2024**

மாற்றுத் திறனாளிகளின் ஆக்கத் திறன்களை மதிப்பளித்தல் மற்றும் இவ் ஆக்கங்களை வெளியிடுவதற்கான சந்தர்ப்பங்களை வழங்கும் நோக்குடன் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சினால் மாற்றுத் திறனாளிகளிற்கான இலக்கிய மற்றும் கலை ஆக்கத்திறன் போட்டியை நடாத்துவதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது.

01. **போட்டிப் பிரிவுகள்**

1.1 சிறுகதை
1.2 மாற்றுத் திறனாளிகளின் சுயசரிதை
1.3 பாடலாக்கம்
1.4 கவிதை
1.5 சித்திர ஆக்கம்
1.6 புகைப்படம்

02. **பொது நிபந்தனைகள்**

2.1 விண்ணப்பப் படிவத்தைத் தவிர போட்டியாளரின் பெயர் அல்லது நிறுவனம் குறித்த எந்தவொரு குறிப்பும் ஆக்கத்தில் உள்ளடக்கப்படக் கூடாது. எந்தவொரு விடயத்திலும் அத்தகைய குறிப்பு சமபந்தப்பட்ட சிறுகதை, மாற்றுத் திறனாளிகளின் சுயசரிதை, பாடலாக்கம், கவிதை, புகைப்படம் மற்றும் சித்திரம் என்பவற்றில் உள்ளடக்கப்பட்டிருந்தால் அந்த ஆக்கம் நிராகரிக்கப்படும்.

2.2 சமர்ப்பிக்கப்படும் ஆக்கம் சுயாதீனமான ஆக்கமாக இருக்க வேண்டியதுடன் மொழிபெயர்ப்புக்கள் அல்லது தழுவல்களாக இருத்தல் கூடாது.

2.3 எந்தவொரு இனம், மதம் மற்றும் பெயர் பெற்ற நபர்களின் குணாதிசயங்களை அவமதிக்கும் வகையில் அல்லது எந்தவொரு நபருக்கும் அல்லது குழுவிற்கும் துன்பம் அல்லது அசௌகரியத்தை ஏற்படுத்தும் வகையில் அல்லது அரசாங்க அல்லது அரசாங்க கொள்கைகளை விமர்சிக்கும் வகையில் சமர்ப்பிக்கப்படக் கூடாது என்பதுடன் அத்தகைய படைப்புக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருப்பின் அவை நிராகரிக்கப்படும். தேசிய ஒற்றுமை அல்லது மத நல்லிணக்கத்தைச்

சீர்குலைக்கும் எந்தவொரு ஆக்கமும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. அத்தகைய ஆக்கத்தைப் போட்டிக்குச் சமர்ப்பிப்பதில் ஏதேனும் சிக்கல் ஏற்பட்டால் இது தொடர்பாக கலாசார அலுவல்கள் அமைச்சு பொறுப்பு ஏற்க மாட்டாது என்பதுடன் அதற்கு உரிய பொறுப்பு சம்பந்தப்பட்ட ஆக்கத் திறனாளியின் பொறுப்பா அமையும்.

2.4 போட்டியாளரின் மாற்றுத் திறன் தன்மை பற்றி அதிபரின்/ நிறுவனத் தலைவரின் / ஒரு மருத்துவரின் / கிராம உத்தியோகத்தரின் / கலாசார உத்தியோகத்தரின் / சமூக சேவை உத்தியோகத்தரின் / ஒரு சமாதான நீதிபதியின் / உறுதிமொழி ஆணையரின் பதவி நிலை முத்திரை மற்றும் கையொப்பத்துடன் விண்ணப்பப் படிவம் பரிந்துரை செய்யப்பட்டு ஆக்கத்துடன் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

2.5 சிறுகதை, மாற்றுத் திறனாளிகளின் சுயசரிதை, பாடலாக்கம், கவிதை, ஆகிய போட்டிப் பிரிவுகள் சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய இரு ஊடக மொழிகளில் வெவ்வேறாக நடாத்தப்படும்.

2.6 தாமதமாகக் கிடைக்கும் மற்றும் போட்டி நிபந்தனைகளுக்கு மாறான ஆக்கங்கள் எந்தவொரு முன் அறிவிப்பும் இல்லாமல் போட்டியில் இருந்து நிராகரிக்கப்படும்.

2.7 ஒவ்வொரு ஆக்கத்திற்கும் தனித் தனியான விண்ணப்பங்களை சமர்ப்பிக்க வேண்டும் என்பதுடன் ஒரு போட்டிப் பிரிவில் ஆகக் கூடியது 03 ஆக்கங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

2.8 மாற்றுத் திறனாளிகளிற்கான இலக்கிய மற்றும் கலை ஆக்கத்திறன் போட்டி தொடர்பான அனைத்துக் கொள்கை முடிவுகளும் மற்றும் இறுதிப் பொறுப்புக்களையும் கலாசார அமைச்சு கொண்டுள்ளது.

## 03. <u>ஆக்கங்களைச் சமர்ப்பித்தல்</u>

3.1 இதனுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு அமைய முறையாகப் பூர்த்தி செய்யப்பட்டு அதிபரின்/ நிறுவனத் தலைவரின் / ஒரு மருத்துவரின் / கிராம உத்தியோகத்தரின் / கலாசார உத்தியோகத்தரின் / சமூக சேவை உத்தியோகத்தரின் / ஒரு சமாதான நீதிபதியின் / உறுதிமொழி ஆணையரின் பதவி நிலை முத்திரை மற்றும் கையொப்பத்துடன் விண்ணப்பப் படிவம் பரிந்துரை செய்யப்பட்டு ஆக்கத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறு பரிந்துரை, பதவி நிலை முத்திரை மற்றும் கையொப்பம் இல்லாத ஆக்கங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

3.2 சமர்ப்பிக்கப்படும் அனைத்து ஆக்கங்களும் செயலாளர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு 08 ஆம் மாடி, செத்சிறிபாய 1 ஆம் கட்டம், பத்தரமுல்லை என்ற முகவரிக்கு 2024.08.30 ஆம் திகதிக்கு முன்னர் தபால் மூலமாக அனுப்பப்படல் வேண்டும் அல்லது நேரடியாக அமைச்சின் மாற்றுத் திறனாளிகளின் கலாசார உரிமைகளை மேம்படுத்தல் பிரிவிற்கு கையளிப்பதற்குரிய நடவடிக்கைகளைச் செய்தல் வேண்டும் என்பதுடன் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **"மாற்றுத் திறனாளிகளிற்கான இலக்கிய மற்றும் கலை ஆக்கத்திறன் போட்டி**

(போட்டிப் பிரிவு மற்றும் வகை – பாடசாலை/ திறந்த)" எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

## 04. போட்டித் தீர்ப்பு

4.1 நிபுணத்துவம் பெற்ற ஒரு நடுவர் குழுவின் மூலம் ஆக்கங்கள் நடு நிலை செய்யப்படுவதுடன் நிபுணர் குழுவின் முடிவே இறுதி முடிவாக அமையும்.

4.2 இந்தப் போட்டிக்கு நிர்ணயிக்கப்பட்ட தரங்களுக்கு அமைய ஆக்கங்கள் பெறப்படா விட்டால் இந்தப் போட்டிக்கு உரிய பரிசுகள், சான்றிதழ்கள் அல்லது விருதுகள் எதையும் வழங்காமல் இருக்க நடுவர் குழுவிற்கு முழுமையான உரிமை உண்டு.

4.3 போட்டி நிபந்தனைகளுக்கு முரணான வகையில் ஆக்கங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருப்பது நிரூபிக்கப்பட்டால் விருதுகள் வழங்கப்பட்ட பின்னரும் அந்த வெற்றிகள் இரத்துச் செய்யப்பட்டு விருதுகள் திரும்பப் பெறப்படுவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். போட்டி நிபந்தனைகளை மீறும் ஆக்கத் திறனாளிகளை தடுப்புப் பட்டியலில் சேர்த்துக் கொள்வதற்குரிய (Black List) நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

## 05. இலக்கியப் போட்டிகள்

### 5.1 போட்டி விதிமுறைகள்

5.1.1 பாடலாக்கம், மாற்றுத் திறனாளிகளின் சுயசரிதை, கவிதை மற்றும் சிறுகதை A4 அளவிலான தாளின் தனிப்பக்கத்தில் கணனிமயமாக்கப்பட்டு அல்லது தெளிவான கையெழுத்தில் அல்லது பிரேல் முறையில் இருத்தல் வேண்டும். கணனிமயப்படுத்தப்பட்ட ஆக்கங்கள் Kalakam எழுத்து அமைப்பில் எழுத்து அளவு 12 ஆக இருத்தல் வேண்டும்.

5.1.2 வெற்றி பெறும் பாடல் ஆக்கத்திற்கான முழுமையான உரித்து ஆக்கத் திறனாளிக்கு உரியதாக இருப்பதுடன் அதனை விளம்பரப்படுத்துவதற்கான உரிமை கலாசார அலுவல்கள் அமைச்சிற்கு உரியதாகும்.

### இலக்கியம்

- **சிறுகதை**

  - ➢ பாடசாலை : ஆகக் கூடியது 3000 சொற்களுக்கு மேற்படாது இருத்தல் வேண்டும்.

➢ திறந்த : ஆகக் கூடியது 5000 சொற்களுக்கு மேற்படாது இருத்தல் வேண்டும்.

- <u>மாற்றுத் திறனாளிகளின் சுயசரிதை (சுயமாக எழுதப்பட்ட கதாபாத்திரக் கதைகள்ஃ இயல்பான சுய பேச்சு )</u>

மாற்றுத் திறனாளிகள் தங்களைப் பற்றி என்ன சொல்ல வேண்டும் என்பதை ஆக்க பூர்வமாக உலகிற்குத் தெரிவிக்க இது வாய்ப்பளிக்கின்றது. அவர்கள் எதிர் கொண்டஃ எதிர் நோக்கி வருகின்ற சிரமங்கள், சவால்கள், அவர்களின் தேவைகள், உரிமைகள், வாழ்க்கை, கலாசாரம், எண்ணங்கள், விருப்பங்கள் அன்றாட பணிகள் ஆகிய விருப்பமான விடயங்களில் கவனம் செலுத்துதல், தங்களைப் பற்றி தாங்களே எழுதும் ஆக்க பூர்வமான எழுத்துக்களை இந்தப் போட்டியில் சமர்ப்பிக்கலாம்.

➢ பாடசாலை:- ஆகக் கூடியது 5000 சொற்களுக்கு மேற்படாது இருத்தல் வேண்டும்.
➢ திறந்த:- ஆகக் கூடியது 10,000 சொற்களுக்கு மேற்படாது இருத்தல் வேண்டும்.

- பாடல்

➢ 3 - 3½ நிமிடங்களுக்கு உட்பட்டதாக இருப்பதுடன் இசைநயத்துடன் கூடிய ஒரு ஒழுங்கினையும் கொண்டிருத்தல் வேண்டும்.
➢ பாடசாலை மற்றும் திறந்த பிரிவுகள் என இரு பிரிவுகளிலும் நடாத்தப்படும்.

- கவிதை

➢ ஆகக் கூடியது பத்து செய்யுள் பகுதிகளை மாத்திரம் கொண்டிருத்தல் வேண்டும்.
➢ உடனடியாக எழுதப்பட்ட ஒரு கவிதை ஆகக் கூடியது A4 அளவுத் தாளில் இரண்டு பக்கங்கள் மட்டுமே இருக்க வேண்டும்.
➢ பாடசாலை மற்றும் திறந்த பிரிவுகள் என இரு பிரிவுகளிலும் நடாத்தப்படும்.

மேலே குறிப்பிடப்பட்ட போட்டிகள் எந்தவொரு கருப்பொருளின் கீழும் ஆக்கங்கள் உருவாக்கப்படலாம்.

5.1 <u>இலக்கியப் போட்டிகளுக்கான பணப் பரிசுகள் மற்றும் விருதுகள்</u>

| போட்டிப் பிரிவு | இடம் | பணத்தொகை (ரூ.) |
|---|---|---|
| சிறுகதை | முதலாமிடம் | 20,000.00 |
| | இரண்டாமிடம் | 15,000.00 |

| | | |
|---|---|---|
| மாற்றுத் திறனாளிகளின் சுயசரிதை பாடலாக்கம் கவிதை | மூன்றாமிடம் | 10,000.00 |
| | ஓவ்வொரு போட்டிப் பிரிவுகளிலும் ஆறுதல் பரிசு (05) பெறுபவர்கள். | வெற்றியாளர் ஒருவருக்கு ரூ.5,000.00 வீதம் |

6. <u>சித்திர ஆக்கங்கள்</u>

<u>6.1 போட்டி நிபந்தனைகள்</u>

6.1.1 சித்திரங்களை வரைவதற்கு தனக்கு விருப்பமான ஊடகத்தைப் பயன்படுத்தி பொருத்தமான மேற்பரப்பில் (கடதாசி/ பலகை/ கன்வேஸ்) சித்திரத்தை வரையலாம்.

6.1.2 சித்திரங்களின் அளவு "18" x "14" (அங்குல) அளவில் இருக்க வேண்டும்.

<u>6.1 சித்திரப் போட்டிக்காக வழங்கப்படும் பணப் பரிசில்கள் மற்றும் விருதுகள்</u>

| போட்டிப் பிரிவு | நிலை | பணப்பரிசு (ரூ.) |
|---|---|---|
| சித்திரம் | முதலாம் இடம் | 20,000.00 |
| | இரண்டாம் இடம் | 15,000.00 |
| | மூன்றாம் இடம் | 10,000.00 |
| | 05 ஆறுதல் பரிசுகள் தெரிவு செய்யப்படும் | ஒரு வெற்றியாளருக்கு 5,000.00 வீதம் |

7. <u>புகைப்படங்கள்</u>

<u>7.1 போட்டி நிபந்தனைகள்</u>

7.1.1 இங்கு சமர்ப்பிக்கப்பட்ட புகைப்படங்கள் மாற்றியமைக்க கூடியதாக இல்லாமல் இருப்பதுடன் அவற்றின் இயல்பான தோற்றத்தை சிதைக்காத வகையில் அதன் நீளம், அகலம் மற்றும் ஒளி தீவீரம் என்பன சரியாக அமைந்திருத்தல் வேண்டும்.

7.1.2 ஒரு போட்டியாளருக்கு போட்டிக்காக அனுப்பக் கூடிய அதிகபட்ச புகைப்படங்களின் எண்ணிக்கை 03 ஆகும்.

7.1.3 புகைப்படமானது கறுப்பு, வெள்ளை அல்லது விரும்பிய வர்ணத்தினைப் பயன்படுத்த முடியும் என்பதுடன் புகைப்படத்தின் அளவானது தாங்கள் விரும்பிய அளவினைப் பயன்படுத்த முடியும்.

7.1.4 புகைப்படத்தின் உள்ளடக்கத்திற்குப் பொருந்தாத ஏதேனும் வெளிப்புற அடையாளங்கள் இருந்தால் அதாவது வாட்டர்மார்க்ஸ், பெயர், திகதிக் குறிப்புகள் மற்றும் இலட்சினைகள் ஆகியவை புகைப்படத்தில் உள்ளடக்கப்பட்டிருந்தால் அந்தப் புகைப்படங்கள் போட்டியில் இருந்து அகற்றப்படும்.

7.1.5 கலாசார அலுவல்கள் அமைச்சினால் வேண்டப்படும் எந்த நேரத்திலும் போட்டிக்காக சமர்ப்பிக்கப்படும் புகைப்படங்களில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படாத அசல் கோப்புவை (RAW அல்லது JPEG) புகைப்படக் கலைஞர் சமர்ப்பித்தல் வேண்டும்.

அவ்வாறு செய்யத் தவறினால் மற்றும் தாமதமாகச் சமர்ப்பிக்கப்படும் புகைப்படங்கள் போட்டியில் இருந்து நீக்கப்படுவதற்கோ அல்லது வெற்றியினைப் பெறாமல் இருப்பதற்கோ நடுவர் குழு தீர்மானிக்கும்.

7.1.6 போட்டிக்குச் சமர்ப்பிக்கப்பட்ட அனைத்துப் புகைப்படங்களும் சம்பந்தப்பட்ட கலைஞரினால் எடுக்கப்பட்ட புகைப்படங்களாக இருத்தல் வேண்டும். அங்கு அறிவுசார் சொத்துரிமை மற்றும் பட உரிமைகள் தொடர்பாக சட்டச் சிக்கல்கள் எழுந்தால் இது தொடர்பாக கலாசார அலுவல்கள் அமைச்சு எந்த வகையிலும் பொறுப்பேற்காது.

7.1.7 மேலும் இந்தப் புகைப்படங்கள் இதற்கு முன்னத் எந்தவொரு போட்டிக்காகவோ அல்லது பொதுக் கண்காட்சிக்காகவோ சமர்ப்பிக்கப்படாத புகைப்படங்களாக இருக்க வேண்டும்.

<u>7.2 புகைப்படப் போட்டிக்காக வழங்கப்படும் பணப் பரிசில்கள் மற்றும் விருதுகள்</u>

| போட்டிப் பிரிவு | நிலை | பணப்பரிசு (ரூ.) |
|---|---|---|
| புகைப்படம் | முதலாம் இடம் | 20,000.00 |
| | இரண்டாம் இடம் | 15,000.00 |
| | மூன்றாம் இடம் | 10,000.00 |
| | 05 ஆறுதல்ப் பரிசுகள் தெரிவு செய்யப்படும் | ஒரு வெற்றியாளருக்கு 5,000.00 வீதம் |

1. மேலதிக தகவல்களை www.cultural.gov.lk என்ற இணையத் தளத்தில் இருந்து பெற்றுக் கொள்ளலாம் மற்றும் மாற்றுத் திறனாளிகளின் கலாசார உரிமைகளை மேம்படுத்தல் பிரிவின் தொலைபேசி இலக்கமான 011-2876586 / இனோக்கா போகொட 0711354361 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ள முடியும்.

**திலக் நந்தன ஹெட்டிஆரச்சி**
மேலதிக செயலாளர் (கலாசார மேம்பாடு)

**கை/ இட்டது: எச்.எம்.பி.ஹேரத்**
செயலாளர்,
புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு.

தொ.இல. - 0112-876586

பெக்ஸ் - 0112-879088

ஈமெயில் - cultural.dis@gmail.com

புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு

மாற்றுத் திறனாளிகளிற்கான இலக்கிய மற்றும் கலை ஆக்கத்திறன் போட்டி - 2024

விண்ணப்பப் படிவம்

அ. ஆக்கத்தை சமர்ப்பிப்பவரின் தனிப்பட்ட தகவல் (அனைத்து விண்ணப்பதாரர்களும் இந்தப் பகுதியை பூரணப்படுத்தல் வேண்டும்)

01. முழுப் பெயர் :-..............................................................
..............................................................................................
02. முழுப் பெயர் (ஆங்கில பெரிய எழுத்தில்) :- ..................................
..............................................................................................
03. தனிப்பட்ட முகவரி :-..............................................................
..............................................................................................
..............................................................................................
04. மாற்றுத் திறனின் தன்மை :- ..............................................
05. தொலைபேசி இலக்கம் :- ..............................................
06. கிராம சேவகர் பிரிவு :- ..............................................
07. பிரதேச செயலாளர் பிரிவு :- ..............................................
08. மாவட்டம் :- ..............................................

ஆ. ஆக்கத்தை சமர்ப்பிப்பவரின் நிறுவனத்தின் / பாடசாலையின் தகவல் (தொழில் புரிபவர் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கு உரியது)

09. நிறுவனம் / பாடசாலை ..............................................
..............................................................................................
10. நிறுவனம் / பாடசாலைக்கு உரிய மாகாணம் ..............................................
11. போட்டிப் பிரிவு ..............................................
12. மாவட்டம் - ..............................................
13. பதவி ..............................................
14. அலுவலக முகவரி :-..............................................
..............................................................................................
15. அலுவலக தொலைபேசி இலக்கம் :-..............................................
16. அலுவலக பெக்ஸ் இலக்கம் :- ..............................................

இ. ஆக்கம் தொடர்பான விபரம்

☐ சிறுகதை ☐ பாடலாக்கம் ☐ கவிதை
☐ மாற்றுத் திறனாளிகளின் சுயசரிதை ☐ சித்திர ஆக்கம் ☐ புகைப்படம்

ஆக்கத்தின் பெயர் :-..............................................

மேலே குறிப்பிடப்பட்டுள்ள சிறுகதை/ மாற்றுத் திறனாளிகளின் சுயசரிதை/ பாடலாக்கம்/ கவிதை / சித்திர ஆக்கம் மற்றும் புகைப்படம் எனது சுயாதீன ஆக்கம் என்றும் இந்தப் போட்டியின் போட்டி நிபந்தனைகளுக்கு நான் இணங்குவதாகவும் இதன் மூலம் உறுதியளிக்கின்றேன்.

திகதி ………………  கையொப்பம் - ……...……………………..

பெயர் - ……………………………………

சான்று உறுதிப்படுத்துதல் ஒரு சமய ஸ்தான மதத் தலைவர் / ஒரு நிறுவனத் தலைவர் / ஒரு அதிபரின்/ ஒரு கிராம உத்தியோகத்தரின் / ஒரு கலாசார உத்தியோகத்தரின் / ஒரு சமூக சேவை உத்தியோகத்தரின் / ஒரு சமாதான நீதிபதியின் / ஒரு உறுதிமொழி ஆணையரினால் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.)

<u>மதத் தலைவர் / நிறுவனத் தலைவர் / அதிபரின்/ கிராம உத்தியோகத்தரின் / கலாசார உத்தியோகத்தரின் / சமூக சேவை உத்தியோகத்தரின் / சமாதான நீதிபதியின் / உறுதிமொழி ஆணையரின் பரிந்துரை :-</u>

இந்த நிறுவனத்தில் சேவையாற்றும் / பாடசாலையில் கல்வி பயிலும் / பிரதேச செயலகம் / கிராம சேவகர் பிரிவில் வசிக்கும் திரு / திருமதி / செல்வி …………………………………………………………………………… ஒரு மாற்றுத் திறனாளி எனவும் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஆக்கம் அவரினுடையது எனவும் சான்று உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி …………  நிறுவனத் தலைவரின் கையொப்பம் ……………………………

பதவி முத்திரை ……………………………